**O.S.No.400/2019**

**PW 2 :** அருள் தேதி 17.02.2026

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் இவ்வழக்கில் 3ம் வாதி. 1ம் பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்ததாகவும் அதற்கு ஆதரவாக அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்ததாகவும் சொல்லியிருக்கிறேன். அந்த கடன் கொடுத்த தொகைக்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அடமான கடன் பத்திரம் தான் தாக்கல் செய்திருக்கிறேன். வேறு வகையான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வாதிகளான நாங்கள் 3 வரில் ஒவ்வொருவரும் பிரதிவாதிகளுக்கு எவ்வளவு தொகை கொடுத்தோம் என்றால் தலா ரூ. 5 லட்சம் கொடுத்தோம். நான் விவசாயம் செய்கிறேன். எனது மகன் **IT** கம்பெனியில் வேலை செய்கிறார். ரூ.5 லட்சம் கடன் கொடுக்குமளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல என்னுடைய விவசாய வருமானமும் என் மகனின் வருமானமும் சேர்த்து கொடுத்தேன். கரூர் மாவட்டம் புஞ்சை புகளூர் வேலாயுதம்பாளையத்தில் 4 ஏக்கரில் தென்னந்தோப்பு உள்ளது. அதற்கான வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு நிலம் இருந்திருந்தால் நான் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும் உண்மையில் எனக்கு பூமி இல்லை என்று சொன்னால் சரியல்ல. அடமான கடன் எழுதி கொடுத்த முனியப்பனுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்பதை குறித்து எந்த ஆவணத்தையும் நான் பிரதிவாதியிடம் இருந்து வாங்கி பார்க்கவில்லை என்றால் சரியல்ல அவருடைய கிரைய பத்திரத்தை வாங்கி பார்த்தேன். அந்த கிரய பத்திரத்தில் யாரிடம் இருந்து சொத்தை வாங்கினார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் ஜெகநாதன் என்பவரிடம் இருந்து வாங்கினார். கடன் கொடுத்தன் பேரில் சொத்தின் பேரில் வில்லங்கம் பார்த்தேனா என்றால் வில்லங்கம் பார்த்தேன் அவருடைய பேரில் வில்லங்கம் எதுவும் இல்லை. சொத்தை கிரையம் கொடுத்த ஜெகநாதன் 1ம் பிரதிவாதிக்கு சம்மந்தி உறவு

முறை என்றால் அது எனக்கு தெரியாது. ஜெகநாதன் 16.11.2005 தேதியில் 3 ம் பிரதிவாதிக்கு ஒரு உரிமை ஒப்படைப்பு ஆவணம் மூலமாக அடமானம் எழுதி கொடுத்து சொத்தின் பேரில் ரூ.445000/- கடன் பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. ஜெகநாதனின் மூல பத்திரத்தை நான் வாங்கி பார்க்கவில்லை. அந்த மூல ஆவணம் 3 ம் பிரதிவாதியிடம் 16.11.2005 தேதியிலேயே ஜெகநாதன் ஒப்படைத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்து ஈரோடு மாவட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். கரூர் மாவட்டம் என் சொந்த ஊர். தாவா சொத்து பேரில் வில்லங்கம் உள்ளதா என்பதை நான் அக்கம் பக்கம் கேட்டு விசாரித்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தான வீட்டில் 1ம் பிரதிவாதியின் சம்மந்தி ஜெகநாதன் தான் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. நானும் 1 மற்றும் 2 வாதிகளும் 1ம் பிரதிவாதியிடம் அடமான கடன் பத்திரம் எழுதி வாங்கும் போது 3 ம் பிரதிவாதியிடம் ஆட்சேபணை இல்லா கடிதம் எழுதி வாங்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஜெகநாதன் ஏற்கனவே 3ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் பெற்ற நிலையில் 1 முதல் 3 வாதிகள் ஏற்படுத்தி கொண்ட அடமானம் 3ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியிடம் ஜெகநாதன் வாங்கிய கடன் சட்டபடியான பாதுகாக்கப்பட்ட கடன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கடனை தீர்த்த பின்னிட்டு தான் சொத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளான நாங்களும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் வஞ்சக கூட்டாக சேர்ந்து 3ம் பிரதிவாதியின் கடனை ஏமாற்றும் எண்ணத்தில் மோசடியான வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே நாங்கள் கோரியவாறு இவ்வழக்கில் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு 3ம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.